மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தன் அவர்களுடைய இந்தக் கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலன் அவர்களிடம் சமர்ப்பித்து அவர்களிடமிருந்து அந்த விடையை நாம் பெற்றால் அதை என்னுடைய விடையாக அவர்கள் ஏற்றுக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வனத்துறையால் பராமரிக்கப்படும் தோட்டங்களில் பஞ்சாயத்துக்களுக்குப் பங்கு.

671—(* வினா எண் 9060) திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கருவேலமரம், நீலகிரி தைலமரம் போன்ற மரங்களை பஞ்சாயத்துக்குச் சொந்தமான இடத்தில் வனத்துறை பிளான்ட் செய்யும்போது வருமானத்தில் 50 சதவிகிதம் பஞ்சாயத்துக்கு அனுமதிக்கப்பட வேண்டுமென்று ஒப்பந்தம் செய்யப் பட்டிருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஒப்பந்தம் என்ற முறையில் ஏதும் செய்யப்படவில்லை.

(ஆ) 1—4—1981 க்கு முன்னர் முழுமையாக பஞ்சாயத்துக் குச் சொந்தமான இடத்தில் எழுப்பப்பட்ட தோட்டங்களின் வருவாயில் மட்டிலும் 50 சதவிகிதம் தொகை பஞ்சாயத்துக்களுக்கு பங்குத் தொகையாக வழங்கப்பட்டு வந்தது. ஆனால் 1—4—1981 க்குப் பிறகு பஞ்சாயத்திற்குச் சொந்தமான நிலங்களில் எழுப்பப்பட்டத் தோட்டங்களுடன் பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை போன்ற இதர அரசுத் துறையினரின் நிலங்களில் எழுப்பப்பட்ட தோட்டங்களின் வருவாயிலும் 50 சதவிகிதம் தொகை பஞ்சாயத்துக்களுக்கு பங்காக வழங்கப்பட்டு வருகிறது.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்துக்களுக்கு தேசிய காடுகள் அமைப்புத் திட்டத்திலே பஞ்சாயத்து சம்பந்தப்பட்ட ஏரி குளங்களிலே இப்படிச் செடிகள் வைத்து விருத்தி செய்தால் அதில் இருந்து வரக்கூடிய வருவாயில் பஞ்சாயத்துக்கு 50 சதவிகிதம் கொடுப்ப

1986 மே 6]

தாக ஒப்பந்தம் செய்யப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் பஞ்சாயத்து யூனியன் சேர்மனாக இருந்தபோது அப்படி ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டதாக அறிகிறேன். ஆனால் அவர்கள் 50 சதவிகிதத்தை அளித்திருப்பதாகக் குறிப்பிட்டார்கள். நான் 1974-75-ல் சேர்மனாக இருந்தபோது ப்ளான்ட் செய்து இரண்டு ஈல்டு (மகசூல்) எடுத்துவிட்டார்கள், அப்படி இரண்டு ஈல்டு எடுத்தும் இன்றுவரை 1 சதவிகிதம் கூட அந்தப் பஞ்சாயத்துக்கு கிடைக்கவேண்டிய ஈவுத் தொகை கிடைக்கவில்லை. சம்பந்தப்பட்ட அந்த ஆணையாளரை அணுகியும் அந்தத் தொகை கிடைக்கவில்லை. அரசாங்கம் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைக் கேளுங்கள்.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: கேள்விதான். எந்தத் தொகையும் கிடைக்கவில்லை. ஆகவே அது கிடைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு—அரசாங்கத்தின் கவனத்திற்கு அது கொண்டுபோகப்பட்டிருக்கிறது, அரசாங்கம் அனுமதி தரவில்லை என்று அவர்கள் பதில் அளிக்கிறார்கள். ஆகவே அது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்களுக்கு விகிதாசாரத்தொகை கிடைக்க அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒப்பந்தம் இல்லை என்று சொன்னது ஓரிரண்டு துறைகளுக்கிடையே எழுத்து மூலமாக ஒப்பந்தம் ஏற்படுத்தப்படுவதில்லை என்பதற்காகச் சொன்னேன். முன்னாலே இருந்த முறைப்படி அந்தப் பஞ்சாயத்துக்குச் சொந்தமான நிலங்களில் பயிரிடுகிறபோது அதில் பாதித் தொகையை அவர்களுக்கு வழங்குவது என்பதை ஒரு முறையாக வைத்துக் கொண்டு வந்தோம். பஞ்சாயத்து நிலங்களுக்கு மட்டுமல்ல. அரசாங்கத்தின் நெடுஞ்சாலைத்துறை அல்லது பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான நிலங்களில் பயிரிட்டாலும் 50 சதவிகிதம் கொடுப்பது என்பது இப்போதும் பழக்கத்தில் இருக்கிறது. இதை இப்போது பல மாவட்டங்களில் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். 447 பஞ்சாயத்துக்களுக்கு ரூ. 84, 60

209.10 23—1—1986 முடிய கொடுப்பதற்கு அனுமதிகள் வழங்கப் பட்டிருக்கின்றன. குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடர்பு கொண்டிருக்கிற தர்மபுரி மாவட்டத்தில் 39 பஞ்சாயத் துக்களுக்கு ரூ. 16,92,186 கொடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டி ருக்கிறது. கொடுப்பதில் ஏதாவது தாமதமாகியிருக்கிறதா என்று தெரியவில்லை. அப்படியிருந்தால் அதை உடனடியாகக் கொடுப் பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

(முற்பகல் 9-30)

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டு விட்டது என்று குறிப்பிட்டார்கள். இது என்னுடைய சொந்த பஞ்சாயத்து. நான் இதிலே 3 முறை சேர்மனாக இருந்திருக்கிறேன். நாங்கள் ஆணையாளர் மூலமாக எழுதிக் கேட்டும், இன்னும் இந்தக் குறிப்பிட்ட பஞ்சாயத்திற்கு வரவில்லை. காட்டிலாகா சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரருக்கு அனுமதி கொடுத்து, இரண்டு ஈல்டு எடுத்து விட்டார்கள். ஆனால், அந்தப் பஞ்சாயத்திற்கு அதற்கான விகிதாசாரம் கிடைக்க வில்லை. ஆகவே, அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் உடனடியாக வழங்குவதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக் கப்பட்டுள்ளது. சமூக காடு வளர்ப்புத் திட்டத்தின் சிறப்பை கிராம மக்கள் தெரிந்து கொள்ளுகின்ற வகையில், எல்லோருக்கும் அறிமுகப்படுத்துகின்ற வகையில் இதை ஒரு நிகழ்ச்சியாகக்கூட ஏற்பாடு செய்து, அதிலே வழங்கப்பட வேண்டுமென்று தெரிவித் தேன். ஆகவே, அவர்கள் பணத்தையெல்லாம் தயாரித்து வைத்திருக்கிறார்கள் என்று அறிகிறேன். மாண்புமிகு உறுப் பினர் தொடர்பு கொண்டிருக்கின்ற இந்த பஞ்சாயத்து, தர்மபுரி மாவட்டத்திலுள்ள 39 பஞ்சாயத்துக்களில் ஒன்றாக இருக்கும் என்று கருதுகிறேன். உடனடியாக வழங்குவதற்கான ஏற்பாடு செய்யப்படும்.

1986 மே 6]

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத்துறை மூலமாக வளர்க்கப்படுகின்ற சமூகநலக் காடுகளை பராமரிப்பதற்குக் கொடுக்கப்படுகின்ற தொகைக்கும், உள்ளாட்சித் துறை மூலமாக வளர்க்கப்படுகின்ற சமூகநலக் காடுகள் பராமரிப்பதற்காகக் கொடுக்கப்படும் தொகைக்கும் நிரம்ப வேறுபாடு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. குறிப்பாக வனத்துறை மூலம் பராமரிப்பதற்கு கொடுக்கப்படுகின்ற தொகை குறைவு என்று சொல்லுகிறார்கள். எனவே, இந்த வேறுபாட்டை சரி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா ? மேலும், இப்போது இரண்டு துறைகளின் மூலம் இந்த சமூகநலக் காடுகளை வளர்த்து வருகிறோம். எனவே, இந்த இரண்டு ஏஜன்சிகள் என்பதை மாற்றி, ஒரே ஏஜன்சி மூலம் இந்த சமூக நலக் காடுகள் வளர்க்கும் திட்டம் பரிசீலிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறையின் மூலம் வளர்க்கப்படுகின்ற சமூகக் காடுகளுக்கு அங்கே என்ன கூலி, ஊதியம் என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. வனத் துறைக்கும், அதற்கும் வேறுபாடு இருக்கின்றது என்றால், அது தனியாக கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினை. அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெளிவான விவரங்களைச் சேகரித்து, இது குறித்துக் கேள்வி கேட்டால், அதற்கான விவரங்கள் சேகரிக்கப்பட்டு, தெளிவாக பதில் சொல்ல முடியும். இரண்டு துறைகளின் மூலம் சமூகக் காடுகள் வளர்க்கும் திட்டத்தைப் பற்றித் தெரிவித்தார்கள். இந்த ஆண்டு முதல் நம்முடைய 'சோஷியல் பாரஸ்ட்ரி' அதாவது சமூகக் காடுகள் வளர்ப்பதை வனத் துறையினர் செய்யவேண்டும் என்று மத்திய அரசு மிக உறுதியாகத் தெரிவித்து, அதற்காக 18 கோடி ரூபாயை வழங்கியிருக்கிறார்கள். அந்தக் கருத்தை மாநில அரசும் ஏற்றுக் கொண்டிருக்கிறது. எனவே, அந்த 18 கோடி ரூபாய் சமூகக் காடுகள் வளர்க்கும் திட்டத்தை வனத் துறை மூலம் இந்த ஆண்டு செய்யப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.